தமிழகம் டாகுரை எவ்விதம் வரவேற்றது என்பதை மறக்கக்கூடாது. இன்று கவிதைக்குச் செல்வாக்கு குறைந் திருப்பதையொட்டி அன்றும் இவ்விதமேதான் நினைத் திருக்கலாமோ என்று சந்தேகிக்கின்றவர்களுக்கு, இல்லை அக் காலத்தில்தான் தென்னுட்டில் பாரதியார் கொடிநாட்டினர் என்று ஞாபகப்படுத்த வேண்டும். அவர் இருக்கையில் கவிதைக்குத் துளியும் ஒளிய வேண்டிய நிர்பந்தமே ஏற்படவில்லை என்று காட்டலாம். டாகுருக்கு, கவிஞன் பெறவேண்டிய பெருமதிப்புக் கிடைத்ததும் பாரதியாருக்கு ஏற்பட்ட மன எக்களிப்புக்கு எல்லையே இல்லை. ஒரு கட்டுரையில் அவர் அச்சமயம் குறித்தார்:

"கீதாஞ்சலி முதலிய ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அவர் வெளியிட்டுள்ள நூல்கள் மிகவும் சிறியன. பாரக் காவியங்களல்ல; பெரிய நாடகங்களல்ல. தனிப்பாடல்கள் சில காண்பித்தார். உலகம் வியப்படைந்தது. நல்ல வயிர மணிகள் பத்துப் பன்னிரண்டு விற்ருல் லட்சக்கணக்கான பணம் சேர்ந்துவிடாதோ?

1 டாகுர் வரலாறு கிருபலானி பக்கம் 223
2 டாகுர் வரலாறு கிருபலானி பக்கம் 224

தெய்வீகக் கவிதையில் பத்து பக்கம் காட்டினுல் உலகத்துப் புலவரெல்லாம் வசப்படமாட்டாரோ?"[1]

எவ்வளவு தூய மனத்துடன் பாரதியார் கொண்டாடுகிருர் மற்ருெரு கவிஞனை! இதுவல்லவா பண்பாடு?

தமிழகத்தின் தனிச்சிறப்பு என்று கூறலாம், பிற தேசத்தவரின் அருமை பெருமைகளை வரவேற்பது, சுவைப்பது இரண்டும். இன்னும் சற்று அதிகம் ஏறுகிறது அவருடைய மதிப்பு.

"அவருடைய கவிதையின் கீர்த்தி பூமண்டலம் முழுவதும் ஏற்கெனவே பரவியிருக்கிறது; உலகத்து மகாகவிகளின் தொகையில் நாம் அவரைச் சேர்த்தாய்விட்டது."

எவ்வளவு உண்மையான மனவெழுச்சி பாருங்கள் அவரிடம்! சுயமாய், அறிவுக் குடமாய் இருப்பவனிடமே பூர்ணமான புகழ்ச்சி எழும் போலிருக்கிறது!

ரவீந்திரருடைய ஆங்கில மொழிபெயர்ப்பைச் சுவைத்தவுடன் பாரதியாருக்கு வங்க பாஷையிலேயே அவருடைய பாட்டுக்களை நுகருவதற்கு ஆசை உண்டாகியது; அவ்வளவே! புதுச்சேரியில் வாசம் செய்தவரானதால், அங்கு அரவிந்த யோகியின் ஆசிரமத்திலுள்ள வங்காளிகளின் உதவி கொண்டு நன்கு வங்க பாஷையைத் தனதாக்கிக் கொண்டுவிட்டார். டாகுரையும் சுயமாய் அவருடைய கவிதை வளம் பெரும் வங்க பாஷையிலேயே அறிய முற்பட்டார்.

டாகுருடைய படைப்புகள் கவிதைகளாக மட்டுமில்லாமல் பலவிதமாய் இலக்கிய உருக்கொண்டு வெளியானதை நாம் அறிவோம். இந்திய பாஷைகள் பலவற்றையும் டாகுருடைய கவிதை, வசப்படுத்தத் தொடங்கியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. முதலில் ஆங்கில மொழி பெயர்ப்புகளே இதர மொழிகளுக்கு வளம் ஊட்டின. வங்க பாஷையில் கவிதையை உணராதுகூட ஆங்கிலத்தையே மூலமாக வைத்துக்கொண்டு மற்ற பாரத நாட்டு மொழிகளில் டாகுரின் அற்புதங்கள் வெளியாயின. டாகுரே தமது படைப்புகளில் பொறுக்கிய சிலவற்றை ஆங்கிலமாக்கி

1 பாரதியார் நூல்கள் கட்டுரைகள் (ஹிந்தி மொழி பெயர்ப்பு) பக்கம் 101,

யிருப்பதால், மொழிபெயர்ப்பில் வெகுவாய் கருத்தின் தெளிவும் நிச்சயமும் மாறவில்லை. இருப்பினும், சில திறனாய்வு செய்யும் அறிஞர்கள் டாகுருடைய சொந்த மொழிபெயர்ப்புகளிலும் குறைபாடுகள் காண்கிறார்கள். உதாரணமாக, பவானி பட்டாசார்ஜி என்பவர் எழுதுகிறார்; "உண்மையைக் கூறுமிடத்து, தமது சொந்த மொழிகளில் கொடுக்காத பொழுது, டாகுர் டாகுராகவே இல்லை. தாமே வேறு மொழியில் கவிகளை ஆக்கியிருந்தும், சிற்சில சமயம் அவருடையவையே என்றுபட்டாலும், எல்லா இடங்களிலும் அவ்விதம் காண்பதில்லை."[1]

தமிழ் செய்த பாக்கியம் பாரதியாரே நேரில் டாகுரின் சிறு கதைகளில் எட்டு உருப்படிகளை தமிழாக்கி அன்றே வெளியிட்டார். வா. வே. சு. ஐயருடைய தொடர்பு மேலிட்ட காலம் அது. இருவரும் டாகுரின் அபிமானிகளாய் இருந்த காரணம் இருவருக்கும் டாகுரைத் தமிழ் நாட்டினர்க்கு அறிமுகப்படுத்துவதில் அலாதியான உத்ஸாகம். சமீபத்தில் 'அன்பு நிலையம்' என்ற சென்னைத் தமிழ்ப் புத்தகப் பிரசுரத்தார்கள் இந்தக் கதைக் கொத்தை மறுமுறை வெளியிட்டிருக்கின்றனர். கதைகளில் மொழிபெயர்க்கப் பட்டவையாவன: ஆசா பங்கம், நஷ்ட பூஷணம், மானபங்கம், நள்ளிரவிலே, பத்திராதிபர், ஸுபா, ரஜாக்காலம், ஸமாப்தி. தொகுப்பின் முதல் முகவுரையில் சுசீந்திரயஞ நாராயண என்பவர் ஆங்கிலத்தில் எழுதியதின் ஸாரத்தை மண்டயம் ஸ்ரீநிவாச ஐயங்கார் என்பவர் தமிழில் வழங்கியுள்ளார். ஓரிரண்டு இடங்களை இங்குத் தந்தால் கேட்பவர்களுக்கு பாரதியாரையே அக்காலத்தில் இருந்தவர்கள் எவ்வளவு மிதமாய்ப் போற்றினார்கள் என்பது புலனாகும்.

"இக் கதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு எவ்வளவு செவ்வையாகச் செய்யப்பட்டிருக்கிறது என்பது உணரத் தக்கது. இதன் காரணம் பாரத தேசத்தவர்களான நமக்குள் ஒரே நாகரிகமும் ஒழுக்கங்களும் பரவியிருப்பதே ஆகும்... அதுவும் இங்கு நேர்த்தியாகவே செய்யப்பட்டிருக்கிறது"[2]

இன்றுள்ள நமக்கு முகவுரையை எழுதியவரின் குறையைத் தான் எடுத்துக் கூறத் தோன்றுகிறது. மொழி பெயர்ப்பு

---

1 டாகுர் இதழ் (1961) நூற்றாண்டு மலர் ப-22.

2 டாகுர் சிறு கதைகள் (அமுத நிலையம்) முகவுரை V

'செவ்வையாகவும்' 'நேர்த்தியாகவும்' இருப்பதன் காரணம் டாகுரின் எண்ணங்களின் அழகும் பாரதநாடு முழுவதும் ரசிக்கக் கூடியவையான பண்பாடுகளாயும் இருப்பதால் என்கிறர் முகவுரையை வரைந்தவர். அவர் மறந்தது ஒரு கவிஞரை மற்றொரு கவிஞர் அறிவதற்கொப்ப மற்றவர்களால் இயலாது. அக்காரணமே கூட பாரதியார் மொழி பெயர்ப்பின் தனிச் சோபையின் விளைவு என்று கூறியிருப்பின் இன்று கூட முகவுரையின் பொருத்தம் உயர்தரமாய் இருந்திருக்கும். வாஸ்தவத்தில் இந்த மொழி பெயர்ப்பின் சுகம் தனியாகவே இன்று வாசிக்கையிலும் காண்கிறது. இதே கதைகளை வேறு சிலர் தாங்களும் வங்க பாஷையிலிருந்தே தமிழில் கொடுத்திருக்கிறர்கள், பார்க்கிறேம், வாசிக்கிறேம். ஆனல் அவை பாரதியாரின் எளிமை மொழியினருகில் வரக் கூச்சப்படுகின்றன.

கதைகளுடன் நிறுத்தாமல் பாரதியார், டாகுர் ஜப்பானுக்கு விஜயம் செய்து, அங்கு ஜப்பானியரிடம் உரைகள் பல நிகழ்த்தியதிலிருந்து சிலவற்றை எடுத்து 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் அக்காலத்தில் வெளியிட்டுள்ளார். ஆங்கிலத்திலிருந்துதான் தமிழாக்கினர் என்றாலும் அவர் டாகுரை எவ்வித பெருமதிப்புடன் நோக்கினர் என்பது தெள்ளென விளங்குகிறது: "விவேகாநந்தர் ஆத்மாவின் பயிற்சியை மாத்திரம் காட்டினர். ரவீந்திரர், உலக வாழ்க்கையும், உண்மையான கவிதையும், ஆத்ம ஞானமும் ஒரே தர்மத்தில் நிற்பன என்பதை வெளிநாடுகளுக்குச் சொல்லும் பொருட்டாக பாரத மாதாவினல் அனுப்பப் பட்டிருக்கிறர்"[1] என்று அன்றே கூறிவிட்டார் பாரதியார்.

தொன்மை இலக்கியங்களை ஊடுருவிப் பார்த்தவர் டாகுர். அவருடைய கவிதைகளிலே பழமையின் மணமும், புதுமையின் வேகமும் இரண்டறக் கலந்து கிடக்கின்றன. "[2] இன்று பாரதப் பண்பாட்டில் காணும் பல வண்ண இழைகளைத் தம்மிடம் சேர்த்துக் கொண்டார் டாகுர். பாரதத்துப் பலமுகமான வாழ்க்கையின் அழகினைத் தம் கவிதைகளில் கட்டிப் பிடித்த பெரும் புகழ் அவரையே அடையும்"

பண்டை முனிவர்கள் தங்கள் அனுபவங்களை உலகிற்கு உபநிஷதங்கள் மூலமாய் அளித்திருப்பதை நன்கு உணர்ந்து,

1 பாரதி நூல்கள் (கட்டுரைகள்) ப - 100, 101

2 ரவீந்திரநாத டாகுர் (கவிதைத் திரட்டு, ஸாகித்ய அகாடமி) முகவுரை ஹீமாயூன் கபீர் ப - XXV.

தமது சொந்த கற்பனைகளிலும் அவைகளில் கண்ட உண்மைகளை உருவாக்கியுமுள்ளார். டாகுர் கவிஞராயிருந்தமையால் பக்குவ மான பார்வையை எதைக் காணும் பொழுதும் சரியான அளவில் அதனுள் செலுத்துவார். இதன் சூட்சமத்தை பிற்பாடு உருவாகும் அவருடைய அற்புத கவிதைகளில் அறிகையில்தான் மற்றவர் களுக்கும் கவிஞனுயிருப்பவனுக்கும் உள்ள வித்தியாசம் நமக்கு விளங்கும்.

அப்சரஸ் ஊர்வசியின் வரலாறு வேத இலக்கியத்திலிருந்து வந்த செய்தி. புராணம் ஊர்வசியின் பிறப்பு மகரிஷியான நாராயணரின் துடையிலிருந்து என்று குறித்தது. பிற்பாடு கவியரசர் காளிதாஸர் ஊர்வசியின் காதற் கதையை தமது நாடக மொன்றில் வெகுவாய் ரசிக்க வைத்தார். ரசிகத் தன்மையொன்று மிருக்க வகையற்ற மகரிஷியினிடமா ஊர்வசிக்கு பிறப்பு என்றே வாய்விட்டுக் காளிதாஸர் வியந்து விட்டார். ஆனல் டாகுர் இதே ஊர்வசியை ஏதோ ஒரு தனிப் பிறவியாகவே வருணித்துவிட்டார். கவிதையில் தான் பிறந்து விட்டாள் ஊர்வசி. வேறு எங்கும் அவளுக்கு பிறப்பு இருக்க முடியாது. அப்படி இருப்பதாய் இருந்தால், ஊர்வசியை ஊர்வசியாக நம்மால் நினைக்க இயலாது ஆகிவிடுவாள். வங்க பாஷையில் அதை வாசித்துக் கேட்டுக் கேட்டு இன்புற வேண்டும். வேறு எந்த விதமாய் அதை ருசிக்க முயன்றாலும் ஊர்வசியின் கவிதை, உருவம், அழிவெய்வது நிச்சயம். ஒன்று தான் நாம் செய்யக் கூடும். ஓரளவு தமிழில் பிரயாசையுடன் மொழி பெயர்த்ததுள்ளதிலிருந்து சில வரிகளை யாவது தந்து, கேட்பவர்களிடம், ‘ஊர்வசியின் தோற்றம் நம்மிடம் பிடிபடாவிட்டால், மின்னல் போல் மறைந்து விடும்’ என்ற எண்ணத்தைக் கிளப்புவோம்.

**“ காம்பில்லாத மலரைத் தானே தோன்றிப் பூத்து விளங்கும் நீ**
**என்று தோன்றியவளோ, ஊர்வசியே !**
**ஊழித்தொன்மையில் ஓர் இளவேனிற்காலையில்**
**கடைந்தெழு கடலில் பிறந்தாய் நீ**
**அமுத கலசம் வலத்திலும், நஞ்சின் கலசம் இடத்திலும்**
**கைகளில் ஏந்தியே வந்தாய் !**

படம் எடுத்தாடும் நாகம் பலகோடி
மந்திரச் சொல்லுக்கு மயங்குதல் போல்
திரைபடு மாகடல் உன் அடிமிசை வணங்க விழுந்தது;
தேவர் கோனும் தலைதாழ்த்திடும்
குற்றமில்லாப் பண்பினய் நீ!

* * * * *

அமரர் அவைதனில் புளகமெழ உவகையுடன் நீ நடமிடுகையில்
அலையென வளையும் அழகுடையாய் நீ, ஊர்வசியே,
சந்தச் சதிசேர மாகடலும் ஆடியது; அலைக் கைக்கொட்டி
பைங்கதிர்கள் மலிய இப்பாரின் துகிலும் அசைந்தது காண்,
நகலிடைப் பூண் உனது ஆரம் விண்டே அண்டமதில்
தாரகை மணிகள் சிதறித் துடித்தனவே!
திடுமென ஆடவர் உடலில் ரத்தம் துள்ளிப் பாய்ந்ததுவே!
திசை முடிவின் மேகலை, உன் இடையில்
மெல்லக் கழன்றது காண்!
துகில் புனையாத் தூய மேனியளே"[1]

சமுத்திர அலைகளின் மேல் நடம் புரியும் சூரிய கிரணத்தை ஒருகால் பிடித்து விடலாமோ என்னவோ டாகுர் சிருஷ்டித்துள்ள ஊர்வசியின் நடனத்தையும், கவிநயத்தையும் ஒரு சொல்லில், இரு சொல்லில் பிடிப்பதென்பது சாத்தியமில்லை.

பாரதியாரை மிகவும் நட்புரிமையுடன் பாதுகாத்து வந்த வா. வே. சு. ஐயர், பாரதியாருடன் டாகுரை சுவைத்ததுடன் நிறுத்திக்கொள்ளாமல் டாகுரைத் தாம் மிகவும் இதயத்தில் வைத்துப் போற்றியதன் அத்தாட்சி போல் சிறுகதைகள் சிலவற்றைச் செய்து, டாகுரின் அடிச் சுவட்டைத் தான் பின்பற்றியதை உலகிற்குக் காட்டினர். **காடெர் கதா** (ஆற்றங்கரைப் படிகளின் கதை) என்ற தலைப்பில் டாகுரின் கதைக் கொத்து ஒன்று பிரபலமாகியுள்ளது. 'ஆற்றங்கரை அரசமரம் சொன்னது' என்ற மகுடம் பூண்ட சிறு கதைக் கோவையொன்றை ஐயர் வெளியிட்டார். டாகுரை உண்மையில் அனுபவித்தவர்கள் ஓரளவாவது கவிஞரைத் தொடரும் ஆசையை வளர்க்காமல்

1 ரவீந்திரர் கவிதைத் திரட்டு (ஸாகித்ய அகாடமி, த. நா. குமாரஸ்வாமி ஆக்கம்) பக் – 667.

இருப்பதை நினைக்க முடிவதில்லை. ஏனெனில் டாகுர், தம்மைச் சுற்றியுள்ளது அவ்வளவிலும் பார்வையைச் செலுத்தி, சுபாவமான நடையில் எதையும் அதற்கான தன்மையுடன் விளக்குகையில் ஏதோ நாமும் சுலபமாய் அவரைப்போல் எழுதலாம் என்ற எண்ணமே தலையெடுக்கும் வாசகருள்ளங்களில். வீணை தனம்மாள் என்றொரு விதுஷி சில ஆண்டுகளுக்குமுன் சங்கீத உலகில் மிகவும் போற்றப்பட்டு வாழ்ந்தாள். அப்பெண்மணி வீணைத் தந்திகளைத் தொட்டு ஒலிகளைக் கிளப்புகையில் இதே விதம் கேட்பவர்களுக்குத் தாங்களும் வாத்தியத்தைக் கையில் எடுத்துச் சுலபமாய் தந்திகளைத் தொட்டால் நாதமும் சங்கீதமும் பெருகும் என்ற பிரமை ஏற்பட்டதுண்டு. திறமையுள்ளவர்கள் செய்யும் எந்தக் காரியமும் இவ்விதமேதான் மற்றவர்களுக்கு ஆயாசமின்றிச் செய்யப்படுவதாகத் தோன்றும். பாலைவனத்தில் காணும் கானல் நீர் போலவே திறமையை நெருங்க நெருங்க அது விலகி விலகிச் செல்வதும் சர்வசித்தமான அநுபவமல்லவா !

- டாகுருக்கு உள்ளத்தில் படாத விஷயமே இருக்காதோ என்ற எண்ணம் அவரை ரசிக்கத் தெரிந்த பிறகு உண்டாவது வெகு சகஜம். தொட்டதெல்லாம் கவிதையாகி விடுவதால், கதிரவன் கிரணம் வியாபிக்கும் இடம் ஆகாச வெளியாயிருக்கலாம் அல்லது சிறு பனித் துளியாயுமிருக்கலாம். வானம் சோபையுடன் இருப்பது போல், பனித் துளியும் வைரமணியாய் திகழ்வதையும் பார்க்கிறோமல்லவா !

டாகுரின் சிறப்பு, மொழி பெயர்ப்பிலும் விளங்குவதின் சூட்சுமம், உண்மைக் கவிதைக்கு பாஷையின் தடைகளே இராது என்பதாம். கவிதைப் பாஷை வேறுதான். அது சொற்களை மட்டும் நம்பியதல்ல. கவிதையின் அழகு, மலர் இருக்கும் இடத்தைக்கூட மறைக்கும் அதன் மணம் போன்றது. வார்த்தைகளைக் கொண்டு ஆராயப் புகுமுன், கவிதையின் கருத்து பளிச் சென்று விளங்குவதே கவிதைக்கு நியாயமாய் இருக்கவேண்டிய குணம்.

ஆன்மீகத் துறையில் ரவீந்திரர் பிறர் கண்டு வியக்குமளவு தாம் தோய்ந்திருந்ததுடன், வாசகர்களையும் தம்பால் இழுத்துச் சென்றுவிடுவார். ஆன்மீக வேட்கை பாரத நாட்டு மக்களுக்கு சுயசொத்து. நாயன்மார்களும், ஆழ்வார்களும் பாடாத பக்திப் பாடல்கள் உலகில் வேறெங்கு காணமுடியும்? வங்காளதேசத்தில்

வைணவப் பாடல்கள் என்று பிரசித்தி பெற்றவை நிறைய உண்டென்று அறிவோம். அவைகளில் நினைவு தெரிந்தது முதற் கொண்டு முழுகி முழுகி எழுந்த கவிஞருக்குப் பக்தியும் பரமனைச் சதா பாடுவதும் இயற்கையாகியதில் ஆச்சரியமில்லை. ஆனால் சுய அனுபவங்கள் பெருத எவனும் இவ்வளவு உருக்கமும் உண்மையும் கலந்த பாக்களை ஆக்க இயலாது.

**தேடிக் கண்டு கொண்டேன்**
**திருமாலுடன் நான்முகனும்**
**தேடித் தேடொண்ணுத் தேவனை என்னுள்ளே**
**தேடிக் கண்டு கொண்டேன்**

என்று அப்பர் சுவாமிகள் நிச்சயமான அநுபவத்தை விளக்குவார். டாகுர் இறங்கிப் பாடுவதிலும் நமக்கு உருக்கம் விளைகிறது; நம்பிக்கை பிறக்கிறது.

**"எனது உயிரின் அடங்காத வேட்கை**
**கடைசியில் ஆராவமுதனை மாந்தித் தணியும் என்று**
**வெகுநாளாய் எனக்கு ஓர் ஆசை,**
**.................................**
**பொன்வேண்டேன், புகழ்வேண்டேன்**
**நான் வேண்டுவது துளி அன்பே!"[1]**

இந்த ஏக்கம் இருப்பதும், சில வேளைகளில் படைத்தவனை அடைந்த அமைதியின் அநுபவமும் கவிதையில் வடிக்கப்பட்டுள்ளதை நாம் கவனிக்கையில்தான் கவிஞனும் கடவுளும் வெவ்வேருய்த் தோன்றுவதில்லை. 'செய்யுங் கவிதை பராசக்தியாலே செய்யப்படுங்கால்' என்றல்லவா பாரதி தமது கவிதையையே பராசக்தியின் செயலாக்குகிருர்! டாகுரும் இவ்விதமே பாடிய பாட்டுக்கள் பல.

**உந்தன் குரலும் வான் உருவி**
**ஒளிப்பொன் ஆருய் ஓடிவரும்,**
**என்தன் பறவைக் கூட்டினிலே**
**எழுந்து உன்பாடல் சிறை விரிக்கும்[2]**

---

1 டாகுர் கவிதைத் திரட்டு (சாகித்ய அகாடமி பக்கம் 187. புரவி
2 கீதாஞ்சலி டாகுர் பாட்டு - 19.

உலக முழுவதுமே தொழிலபிவிருத்தி சகாப்தம் இது என்று முரசு கொட்டப்படுகிறது. யந்திரங்களின் சுழலோசை கேட்காத செவியும் ஒலி பரப்பிகளின் அலறலைக் கேட்டுக் காதுகளை மூடிக் கொள்ளாத மனிதனும் இன்று இங்கு இருக்கமாட்டான். விஞ்ஞான ஆராய்ச்சி மனிதனையே விழுங்கும் அணுகுண்டு வரையில் கொண்டு விட்டிருக்கும் காலம் இது. டாகுர் செல்லாத கண்டங்கள் ஆப்பிரிக்காவும், ஆஸ்திரேலியாவுமே. இதர நாடுகளுக்கெல்லாம் அடிக்கடி சென்றுவந்தவர். பல மாதங்கள் சேர்ந்து வசித்தும் இருக்கிறார். பல நாடுகளில் அங்குள்ள நாகரிக மேம்பாட்டைச் சில இடங்களில் ரசித்துமிருக்கிறார். ஆயினும், பாரதப் பண்பாட்டை நினையாத சமயமோ, ஆன்மீகத் துறையில் தோயாத வேளையோ அவரிடம் இருந்ததில்லை. எவ்வளவுக் கெவ்வளவு உலக சமாதானமும் அமைதியும் சண்டையின்றி வாழும் நோக்கமுமே மக்களிடம் அவரால் புகட்டப்பட்டு வந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு, இந்திய நாகரிகத்தின் நுண்ணிய புலன்களில் வழிபடும் விழிப்புமே அவரிடம் மேலிட்டன.

தற்சமயம் வங்க பாஷையைப் பயின்றவர்கள் தென்னாட்டில் நிறைய இருக்கின்றனர். இருப்பினும், இரண்டொருவரைத் தவிர மற்றவர்கள் கவி இதயம் படைக்காத காரணம் வார்த்தைக்கு வார்த்தை வங்கத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பதைச் செய்துவிட்டு, கவிதையின் அழகையோ ஆழ்ந்த உட்கருத்தையோ, துளியும் பிறர் உணராதவண்ணம் ஆக்கி விடுகிறார்கள். இச்சந்தர்ப்பத்தில்தான் பாரதியார் எதனால் டாகுருடைய கவிதைகளைத் தொடாது அவருடைய கதை, கட்டுரைகளை மட்டும் தமிழாக்கினார் என்பதை நினைக்கத் தோன்றுகிறது. கவனித்தால், பாரதியார் நாளிலேயே டாகுருடைய சில உயர்ந்த கவிதைகளில் முக்கியமான சிலவற்றை உலகம் முழுவதும் போற்றத் தொடங்கிவிட்டது. தாமே ஓர் கவிஞராய் இருந்தமையால்தான் பாரதியார் மற்றவர்களைப்போல் ரவீந்திரருடைய அரிய கவிதைத் திரட்டுகளைத் தமிழில்தர முனையவில்லை. கவிக்கு உருவம் மிக மிக முக்கியமானது. கவிதையை மொழி பெயர்ப்பில் உருவம் கெடாது தருவது சாத்தியமில்லை. சிலவேளைகளில் அப் பிரயத்தனம் மூலத்தைச் சிதைப்பதைத் தவிர்த்து வேறு எவ்வித நலனையும் கிட்ட வைத்துவிடாது.

அக்காரணமேகூட பாரதியாரைத் துரிதமாகத் டாகுருடைய கவிதைகளைத் தமிழாக்கத் தூண்டியிராதிருக்கலாம் என்று தோன்றுகிறது.

அதற்காகக் கவிகளை இதர மொழிகளில் கொடுக்கவே கூடாது என்றோ, கொடுப்பது மூடத்தனம் என்றோ முடிவுகட்டுவது சரியில்லை. நாமறிய எத்தனையோ ஐரோப்பிய பாஷைகளில் இருந்து அருமையான இலக்கிய நீதிகளை ஆங்கில மொழி பெயர்ப்பில் வாசிக்கின்ற நாமும், ஆங்கிலத்தின் உதவிகொண்டு கிரேக்க, பிரஞ்சு, ஜர்மானிய, இத்தாலிய பாஷைகளில் உள்ள பற்பல காவிய நாடகங்களை வாசித்தின்புறுகிறோம். நிச்சயம் இரண்டு தடவை இதர மொழிகளில் மாற்றப் பட்டிருப்பதால் மூலத்தின் முழுப் பெருமையையும் நம்மால் தகுந்தவிதம் வாங்கிக்கொள்ள இயலாதிருக்கலாம். அதிர்ஷ்ட வசமாய் மொழி பெயர்ப்பில் சுகமும் சுத்தமும் ஒருங்கே கைகோர்த்துக்கொண்டு மூலத்தின் அழகையும் சிதைக்காமல் இருந்துவிட்டால் அதைவிட பெருத்த லாபம் ஏது?

உதாரணமாக ரசிகரொருவர் தமிழில், அதுவும் செய்யுள் வடிவத்தில் செய்திருக்கும் மொழிபெயர்ப்பொன்றை ஆராய்வோம்.

"பெண்ணே உன்னை இறைவன்தான்
பேணிப் படைத்தான் என்பதில்லை;
எண்ணி எண்ணி மண்ணில்உனை
எடுத்துப் படைத்தார் ஆடவரும்.
நண்ணும் அவர்தம் இதயத்தில்
நாளும் பெருகும் எழிலையெலாம்
பெண்ணே அளித்துன் அழகென்றே
பேசிப் பேசிப் பித்தானர்.
பொன்னல் ஆன இழையால்உன்
புதுமை நெய்தார் கவிஞரெலாம்
உன்னை அமரப் புதுப்பொலிவாய்
ஒளிர வரைந்தார் ஓவியரும்
மன்ன முத்தம் கடல்ஈயும்;
மண்ணுட் கனிகள் பொன்அருளும்.
வண்ணச் சோலை மலர்தரும்உன்
வடிவை வரையில் நிதியாக்க.

உன்தன் இளமைத் திறத்தினையே
உன்னி உன்னி ஆடவரும்
முந்தும் ஆசைப் பெருங்கடலில்
முளைத்த வனப்பாம் அமுதொளியால்
உன்தன் அழகை மெருகிடுவார்,
உயர்வார், அதனால் உன்வடிவில்
விந்தைப் பெண்ணே பாதி,அவர்
வீயாக் கனவுன் மறுபாதி"[1]

செய்யுட் சுகம் ஒரு பாதியும் தமிழின் இயற்கை அழகு மறு பாதியுமாய்ப் புதைந்துள்ள ஆழ்ந்த கருத்தை காப்பாற்றியிருப்பதைக் கண்டு நிம்மதி எய்கிறது நம்மனம்.

பண்டிதப் பேராற்றல் படைத்த வேறுசிலரும் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். தமிழில் செய்யுளைத் தாராளமாய்ப் பொழியும் வன்மை அவர்களுக்கிருப்பதொன்றே அவர்களுக்கு ஏற்ற சன்மானம். குறிப்பாய்ச் சொல்வதனால் கி. வா. ஜகந்நாதன், தமிழ் அழகன், இவ்விருவருடைய மொழிப்பெயர்ப்புகளையும் பாராட்டக் கடமைபட்டுள்ளோம். கவிதைகளை விட்டுவிட்டால், கதை, நாவல், கட்டுரை இவைகளைத் தமிழில் அதிகமாய்த் டாகுருடைய மூலத்திலிருந்து இன்று நன்கு மொழி பெயர்த்திருப்பது தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கொரு அடிகோலியாகக்கூட இருப்பதாய் நினைக்கலாம். வெகு காலத்திற்கு முன்பே ஆங்கிலத்திலிருந்தே தமிழாக்கம் பெற்றவை வே. நாராயணன் செய்த 'புயற் காற்று' என்ற 'நௌகாதூபி'யின் மொழிபெயர்ப்பும், 'வீடும் வெளியும்' என்ற கி. சாவித்திரி அம்மாளின் 'காரே பெயரே' யின் மொழி பெயர்ப்புமாகும். 'சித்ரா' என்ற ஒற்றை அங்க நாடகத்தையும் அன்றே ஆங்கிலத்திலிருத்து தமிழில் 'தமிழ் உலகம்' என்ற வாரப்பத்திரிகையில் கி. சாவித்திரி அம்மாள் மொழிமாற்றம் செய்திருந்தார்.

சமீபத்தில் இருபது முப்பது ஆண்டுகளுக்குள் பல தமிழாக்கங்கள் நேரில் வங்கமொழியிலிருந்து ஏற்பட்டுவிட்டன. ரங்கநாயகி என்பவர் 'குமுதினி' என்ற நாவலையும், 'மலஞ்சா' (பூந்தோட்டம்) நான்கு அத்தியாயம் (சார் அத்தியாய்) 'கோரா' விநோதினி தோன்றவை. நா. குமாரசுவாமி, சேனபதி இவர்

1. குருதேவரின் குரல்: அ. சீநிவாசராகவன், ப. 119, 120,

களின் மூலம் தமிழில் வெளியாகிவிட்டன: இவ்விரு சகோதரர்களும் டாகுரின் இலக்கியங்களை மட்டுமல்ல, இதர சில வங்க நாவலாசிரியர்களையும் தமிழ் அன்னைக்குக் காணிக்கையாக்கி விட்டார்கள். ஸாகித்ய அகாடமியார் கவிஞரின் நூற்றுண்டையொட்டிக் கவித்திரட்டு, சிறுகதைத் திரட்டு, வியாஸத் திரட்டு, என்ற வகையில் தமிழாக்கங்கள் பலவற்றை வெளிக்கொணர்ந்து விட்டார்கள். இவையெல்லாம் தமிழ் இலக்கியத்திற்கான சரியான பணிகள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

ரவீந்திரரின் பெயரும் புகழும் வேண்டிய மட்டும் தமிழ் நாட்டில் இன்று உலாவி வருவதொன்றே உண்மை. ஆயினும் அவருடைய இசை சுகத்தின் மர்மத்தை ஆராய்ந்தோ அல்லது அவருக்கியல்பாயுள்ள தொனிகளுடன் கூடிய கற்பனைகளை உணர்ந்தோ, தமிழகத்தில் இன்னும் அநேக எழுத்தாளர்கள் நன்மை பெறவில்லை. இப்பொழுதும் கூட, டாகுருடைய ஆங்கிலத்தைப் பழிப்பதையே விரதமாகக் கொண்டுள்ள ஆங்கில பண்டிதர்கள் சிலர் தமிழ் நாட்டில் இருக்கிறுர்கள். அவர்களுக்கு டாகுரைப் பற்றிய நினைப்பெல்லாம் அவருடைய ஆங்கிலமே அல்லாது அவரது கவிதையே இல்லை. வேறு சிலருக்கு, சிந்தனையைச் சதா தூண்டும் எந்த எழுத்தையும் வெறுக்கத்தான் மனமுண்டு. அவர்களுக்கு ஆழமும் அறிவும் பதிந்துள்ள டாகுரிடம் எப்படி ஈடுபாடு உண்டாகும்? மொத்தத்தில் இலக்கிய அநுபவமே குறைவானவர்களிடம் எவ்விதமான கற்பனையும் இனித்து விடாது. சரத்சந்திர சாட்டர்ஜியின் நாவல்களில் காணும் சுவாரஸ்யத்தைச் சிலர் டாகுரிடம் காணுது திண்டாடுவார்கள். சரத்சந்திரர் உயர்ந்த நாவலாசிரியர்தாம் என்ருலும் கவிஞராயிராததால் டாகுருடைய திருஷ்டி போன்றதொன்றை அவரிடம் அவ்வளவாகக் காண இயலாது. அதுவே சிலருக்கு அவரிடம் மதிப்பு அதிகம். அவர்கள் வாதம்: நாவலாசிரியன், வாழ்க்கையை அப்பட்டமாய் படம் பிடிப்பதொன்ருலேயே மேன்மை எய்துகிருன். இதர சக்திகளிருப்பினும் முக்கிய லட்சியத்துக்கே அவை விரோதமாகாமலிருப்பது எளிதல்ல. ஆகையாலே நாவலாசிரியர் என்பவர் கவிஞராயிருப்பதுகூட பொருத்தமல்ல என்பர். எதுவாயினும், சிறுகதைப் புனைவதில் டாகுருக்கு நிகர் அவரே என்றுதான் ஏகோபித்து எல்லோரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

கவனித்தால் சிறுகதையினும் டாகுரிடம் பரிமளிப்பது கவி இதய மொன்றே. கவிதை தானே என்றே சில சிறுகதைகள் இவருடைய முழுத் திறமையையும் பெற்று விளங்குகின்றன. உலகம் பலவிதம் அல்லவா! ஆகையால் எதனால் ஒன்றை எல்லோரும் அநுபவிக்கிறார்கள் ரசிக்கிறார்கள் என்பதே புதிர் போன்றாகி விடுகிறது.

நாடகங்களை எடுத்துக் கொண்டால், இத்துறையில் டாகுருடைய சிருஷ்டிகள் பல காரணங்களால் அதிகம் தமிழாக்கம் பெறவில்லை. முக்கியமாய் அவர் நாடகங்களில் பாத்திரங்களும், சந்நிவேசங்களும் கருத்தைக் குறிக்கும் சின்னங்களாயிருப்பினும், மொத்தத்தில் நாடக உத்திக்கான துரிதமான போக்கு அவைகளில் இல்லாமலிருப்பதும் என்றே சிலர் குறை கூறுகின்றனர். "சித்ரா' என்ற ஒற்றை அங்க நாடகம் வாசிக்க வாசிக்க இன்ப மூட்டும் என்பதில் ஐயமில்லை, ஒரே அங்கமாயினும், முழு நாடகத்தை அநுபவித்த மனத்திருப்தி ஏற்படுவதின் சூட்சுமந் தான் என்னே! என்று வியக்கத் தோன்றுகிறது. சிறியபாட்டின் ஒரே அடியில் பெரும் தத்துவம் பொதிந்து கிடப்பதைப்போல் அல்லவா ஒரே அங்கத்தில் பல அங்கங்கள் கடந்த கருத்தோவியம் விரிந்து கிடக்கின்றது.

'உயிர்ப்பலி' என்ற நாடகத்தைத் தமிழில் டி. கே. எஸ். சகோதரர்கள் நடித்துக் காட்டியுள்ளார்கள். ஆங்கிலத்திலுள்ள மொழி பெயர்ப்பைவிட தமிழகத்தில் நாடகமே புது உயிர் பெற்று விடுகிறது. உருக்கமும் உயர்வும் நாடகம் முழுவதும் பரவி நிற்பதை மேடையில் காட்சி பெற்ற சமயம் நன்கு ரசிக்க இயன்றது. தமிழில் அழகாயிருப்பதன் காரணம் ஒருகால் இந்திய நாகரிகத்தின் அடிப்படை எல்லா மொழிகளுக்கும் சொந்தமாய் இருப்பதால் வங்கத்திலிருந்து பாரதநாட்டு இதர மொழிகளில் எல்லா நாடகங்களுமே சுவையுடன் இருக்கலாம். சின்னங்களாய் கருத்து விசேஷங்களை அமைப்பதும் இந்நாட்டில் வெகு சகஜமான தாலும் இலக்கிய இன்பத்திற்கு அவை தடை செய்யாதிருப்பதை எதிர்ப்பார்க்க வேண்டியதே.

எதுவாயினும் டாகுருடைய நாடகங்களில் பலருக்கு இன்னும் ருசி ஏற்படவில்லை என்றே நினைக்கவேண்டும். முக்த-தாரா என்ற தலைப்புடன் எழுதப்பட்ட நாடகத்தை எடுத்துக் கொண்டால்,

நம்முடைய வாதத்தை விளக்கிவிடலாம். அந்த நாடகத்தில் முக்கியமாய் நீர்வீழ்ச்சியின் விடுதலை எனப் பொருள்படவைக்கப் பட்டிருப்பது முதலில் கவனத்தை இழுக்கும். சுதந்திரத்தின் தளைகளை அகற்றப் பாடுபடும் முயற்சியே விவரிக்கப்பட்டுள்ளது நாடக நிகழ்ச்சிகளில். மலையும் பள்ளத்தாக்கும் கொண்ட ஒரு தேசத்தின் அரசன் மலையிலிருந்து விழும் அருவி ஜலத்தைக் கீழ் பிரதேசத்திலிருக்கும் ஜனங்களின் நிலங்களுக்குப் பாயாமல் அணை யொன்றை வெகு விமரிசையாய் கட்டி முடிக்கிருன். வரி யொன்றை சுமத்தி கீழ் நிலங்களிலுள்ளவர்களிடம் அரசன் நீர் பாய்வதற்குத் தடையாய் அவர்களை வாட்டுகிருன். வரிகொடா இயக்கம் ஒன்றை சந்நியாசி ஒருவன் ஜனங்களிடம் கிளப்புகிருன். அரசனுக்கும் சந்நியாசிக்கும் ஏற்படும் வாக்குவாதத்தைக் கவனித்தால் பிற்பாடு மகாத்மாவுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத் ஏற்பட்டப் பெரும் சுதந்திரப் போரின் ஞாபகங்கள் வராமல் இருக்க முடியாது. இந்த நாடகத்தைத் டாகுர் மகாத்மாவின் வரிகொடா இயக்கத்திற்கு முன்பே கற்பனையில் காட்டிவிட்டார். ஒத்திகை நடத்திக் கொண்டிருக்கையில்தான் மகாத்மாவைச் சிறையிலிட்டனர் அதிகாரிகள். நாடகமும் சாந்தி நிகேதனப் பள்ளி மாணவர்களால் நடைபெற வேண்டியது நின்றுவிட்டது.

'ரத்த கரபி', 'தாஷேர் தேச்' ராஜா, 'அசலாயதன்', போன்ற நாடகங்கள் இவ்விதமாகவேயே வளர்ந்தவை. தபால் ஆபீஸ் (டாக்-கர்) என்ற பிரபலமான நாடகத்திலும் சிற்சில பாத்திரங்களும் சம்பவங்களும் உலகில் தென்படும் சிற்சில முக்கிய நிகழ்ச்சிகளுக்குச் சின்னங்களாகவே அமைக்கப்பெற்று உள்ளன. நாடகத்தின் முடிவு உள்ளத்தை உலுக்குகின்றது. 'என்னைத் தபால்காரன் ஆக்கக் கேட்பேன். வீட்டுக்கு வீடு சென்று அவனுடைய ஆணையைச் சொல்லி வருவேன்' என்று அமால் என்ற குழந்தை கேட்டுக் கொண்டே திரைக்குப் பின் மறையும் காட்சி தவிர்க்க இயலாத முடிவொன்றை எதிர்ப் பார்க்கும் மனித இனம் காத்திருக்கும் செய்தி ஒன்றேதான் என்பதை நினைப்பூட்டும்.

டாகுருடைய இதயத்தைப் புகுந்து பார்க்க ஆசைப்பட்ட சிலர், கவிதையின் மேன்மையை மட்டும் புகழ்ந்துவிடாமல், இந் நாட்டில் ஆன்மீகத் துறையில் வாழையடி வாழையாய் வந்த திருக்கூட்டமொன்று முன்னல் பாடிய சில அருமைக் கவிதைகளை

டர்குருடைய சமய வெழுச்சிகளுடன் ஒப்புமை பார்த்து உள்ளார்கள்; பார்த்தபின் அதேபோல் தெய்வக்குரல் இவரிடமும் ஒலிப்பதைக் கருதித் தங்கள் விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். ஆசிரியர் சீநிவாசராகவன் அவர்கள் இப்பணியைச் சிறக்கச் செய்து வெற்றியும் கண்டார். மகாகவியின் நூற்றாண்டு விழாவையொட்டி அண்ணமலை பல்கலைக் கழகத்தில் அன்னாள் தமிழ்ப் பேராசிரியராய் விளங்கிய தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் ரவீந்திரரைப் பற்றிய வரலாற்றையும், நூல்களின் சிறப்பைக் குறித்தும் புத்தகம் ஒன்றை வெளியிட்டார். கவிஞர் வாழ்க்கையும் கவிதையும் பற்றிய தமிழ் நூலொன்றை ஸாகித்ய அகாடாமியர்கள் அச்சமயம் வெளியிட்டார்கள். இவைகள் தாம் டாகுரின் வரலாற்றுத் துறையில் சமீபத்தில் வெளிவந்த புத்தகங்கள்.

ஏற்கெனவே 1918ஆம் ஆண்டில் நமது வயது முதிர்ந்த கே. எஸ். ராமசுவாமி சாஸ்திரியார் விவரமான நூலொன்றை டாகுரின் புத்தகங்களைப் பற்றி எழுதியிருந்தார். முன்னாள் ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் அவர்கள் மைசூரில் கலாசாலையில் பேராசிரியராய் இருந்த சமயம் அதாவது 1920ஆம் ஆண்டில் 'டாகுருடைய வேதாந்த விளக்கம்' என்ற நூலை முதல் முதலில் ஆங்கிலத்தில் வெளியிட்டார்: அச்சமயம் கவியரசர் ராதாகிருஷ்ணனுடைய நுண்ணிய பரிசீலனை சக்தியை வியந்து பாராட்டியிருக்கிறார். வங்காள பாஷை தெரியாதது ஒரு குற்றமாகவோ, குறையாகவோ நினைக்காமல், டாக்டர் ராதாகிருஷ்ணன் அறிவு படைத்த படிப்பாளியாய் இருந்தமையால் தமது நூல்களில் காணும் வேதாந்தக் கருத்துக்களை துப்புர அலசிப் பார்த்திருப்பதை மெச்சினார். சமீபத்தில் 'Philosophy of Rabindranath Tagore' என்ற நூலின் இரண்டாம் பதிப்பின் முன்னுரையின் டாகுர் தமக்கு அச்சமயம் அனுப்பிய கடிதத்தை ராதாகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

ரவீந்திர சங்கீதம் என்ற தனித்தன்மை பெற்ற இசையின் பெருக்கை டாகுரிடம் வங்காளிகள் அநுபவித்திருந்தார்கள். நாடோடிப் பாட்டுக்கள் பலவற்றை சிறுபிராயத்திலிருந்து அவர் தமது இனிய குரலைக்கொண்டு பாடிப் பிறரையும் வசப்படுத்தியுள்ளார். தென்னாட்டினருக்கு உள்ள சங்கீத அநுபவம் பெரிது. இருப்பினும் ரவீந்திர சங்கீதத்தையும் வல்லுநர்களைக் கொண்டு

நன்கு பயிற்சி செய்து 'சியாமா' என்ற நாடக–நாட்டியத்தை கலாக்ஷேத்திர மாணவ மாணவிகள் நடித்துக் காட்டினார்கள். டாகுரின் இசையைக்கூட ஒதுக்காமல் தமிழ்நாடு தன்னால் இயன்ற அளவு அதன் சுகத்தைப் பெற வழி செய்திருக்கிறது.

ரவீந்திரருடைய கடிதங்கள் மிக மிக ருசியுள்ளவை. 'வெளி நாட்டிலிருந்து எழுதிய கடிதங்கள்' என்ற தொகுப்பு ஒன்றே போதும். கடிதமெழுதுவதிலும் கவிப் பண்புகள் நிறையவே அவரிடம் வெளியாயின. மனைவிக்கு அவர் எழுதியவைகளை விட்டால், இன்னும் இங்கு அவர் கடிதங்களைத் தமிழ் ஆக்கும் பணியில் ஈடுபடாதது வருந்தத்தக்கதாகவே தோன்றும்.

வங்காளத்திலிருந்து டாகுர் சென்னைக்கு 1918ஆம் ஆண்டில் விருந்ினராய் வந்தார். தமிழாக்கம் செய்யப்பட்ட பங்கிம் சந்திர சட்டர்ஜியின் நாவல்களை ரசித்த தென்னடைல்லவா? டாகுரின் வருகையைக் கொண்டாடினார்கள். டாகுர் இங்கு வந்த பொழுது பேசிய சில உரைகளில் தமிழ் மொழிகளில் பள்ளிகளில் போதனைமுறையாக அமைவதுதான் சிறுவர்களுக்கு சிரமமின்றி கல்வி வளரும் என்று சந்தேகமறக் கூறினர். தமிழ்தாத்தா மகாமகோபாத்தியாய சுவாமிநாத ஐயரை 'தியாகராஜ விலாசம்' என்ற அவரது இல்லத்திலேயே கண்டு பேசினர். சுவாமிநாத ஐயருக்கு தமிழைத் தவிர ஆங்கிலமே தெரியாது என்பதைக் கேட்டுத் துளியும் பின்வாங்காமல், அவருடைய திடமான தமிழ் அபிமானத்தை மெச்சினதாகச் செய்தி பரவியது. அக்காலத்தில் ரசிகமணி, டி. கே. சி. அவர்கள் டாகுரைத் தரிசித்து தமிழில் சுய கவிதைகள் செய்வதொன்றே இலக்கியமாகும் என்பதை வேரூன்ற வைத்துக் கொண்டார். அக்காலங்களில் படித்தவர்கள் பலரும் ஆங்கிலத்தில் எழுதுவதையே இயற்கையான காரியமாகவும், தமிழில் எழுதவரவில்லை என்பதைப் பெருமையுடன் கூறியுமுள்ளார்கள். டி. கே. சி.யின் வாதம் என்றுமே தமிழில்தான் தமிழர்களின் எழுத்துக்கு வன்மை உண்டாகும், பிற பாஷையில் அவ்வாறு ஏற்படுவது சாத்தியமில்லை, எதிர்ப் பார்ப்பதும் தவறு, என்பது.

தமிழபிமானம் மட்டும் இருந்தால் போதாது. பாரதியார் சொன்னதை மறக்கவே கூடாது. பிறநாட்டு சாத்திரங்களை தமிழில் கொண்டு வரவேண்டும். விரிவான மனத்தைப் பேணப்

பேண உலகம் முழுவதுமே ஒன்று என்னும் தத்துவம் உள்ளத்தில் நிரப்பும் நம்மாழ்வார் பாடலைக் கேட்கிறோம்.

**உணர்ந்து உணர்ந்து அகன்று உரு**
**வியந்த இந்நிலைமை**
**உணர்ந்து உணர்ந்து உணரினும் இறைநிலை**
**உணர்வு அரிது உயிர்காள்.**

இதையே டாகுரும் வாய்விட்டுக் கதறுகிறார்.

**"உன்னை அறிந்தேன் என இந்த ஊர் முழுவதும்**
**என்னவோ பாடி இறுமாந்தேன் என்பாட்டில்,**
**உன்தன் வடிவத்தைக் காண்பார்பலர், என்பால்**
**வந்துநிற்பார் 'யார் அவன், சொல்' என்று வினவிடுவார்;**
**ஏதும் பதில் அளிக்கமாட்டாமல் 'உண்மையிலே**
**யாதும் சொல் அறியேன்" என்பேன்.** [1]

புதுமையொன்றை எந்தத்துறையிலும் புகுத்தியவராயினும் பழமையின் பண்பாட்டிலும், அதைச் செழிக்கவைத்த ராமாயண, மகாபாரத இதிகாசங்களிலும் கூர்ந்து மனத்தைப் பறிகொடுத்தவர். புத்தமத ஜாதகக் கதைகளிலும் பேரின்பம் பெற்றவர். எத்தனையோ அரிய படைப்புக்களிலும் பழங்கதைகளில் புதிய கற்பனைகளைப் புகுத்தி இன்பம் தழைக்கச் செய்துவிட்டார். குந்தி-கர்ண சம்வாதம், திருதராஷ்டிரன் – காந்தாரி இவர்களின் பேச்சு, கசன்-தேவயானி இருவரின் காதல் முரண்பாடு, இவைகளையெல்லாம் புதுவிதமாய் இலக்கிய சுவையுடன் கற்பனைக் களஞ்சியங்களாய்ச் செய்துவிட்டார். சிறுகதைச் சிருஷ்டியை மட்டும் எடுத்துக் கொண்டாலே போதும். அவருடைய சிந்தனைகள் எவ்வளவு உன்னதமாயிருந்தன என்பதை நிரூபிக்க சிறுகதை சிறுகதையாய் ரூபத்தில் தோன்றுமே அல்லாது உள்ளடங்கிய கருத்து ஆயுள் பரியந்தம் வாசகனை அதையேநினைக்கச் செய்யும். உதாரணம் காட்டுவது அவசியமாகிறது. 'திருஷ்டிதானம்' என்ெறாரு சிறுகதை மகிழம்பு இனியதாய் சிறுமலரிலிருந்து மணத்தை பரப்புவதற்கொப்ப, நம் மனத்தைவிட்டே என்றும் அகலாது.

குமுதினி என்ற பெண், டாக்டர் ஒருவனுக்கு மனைவியாகிறாள். அவளுடைய பார்வை மங்கி, டாக்டர் தொழிலில் கால்

1 குருதேவரின் குரல் பக்கம்-17

ஊன்றிய புருஷன் சிகித்ஸை செய்ய முற்படுகிருன். வரவர அவளுடைய கண் அதிகம் பார்வை இழக்கவும், அவளுடைய சகோதரன் வைத்தியத்தை தடுக்கிருன். புருஷனுக்கும் அவனுக்கும் இதனுல் மனஸ்தாபம் ஏற்படுகிறது. உடனே குமுதினி தன் புருஷன் பக்கம் சேர்ந்து கொண்டு 'அண்ணு, என் கண்ணைப் பற்றிய உரிமை என் புருஷனுக்குத்தான் உண்டு. நீ இதில் தலை யிடாதே' என்பாள். அண்ணன் விலகிவிடுகிருன். பிற்பாடு முழுவதும் அவள் பொட்டையானதும் புருஷன் அவளிடம் வந்து 'குமு' என்னை நம்பி உன் கண்கள் ஒளி இழந்தனவே! நீ என் தெய்வம், இவ்வளவு பொறுமைக்கும் ஆளானது என்கிருன். அவள் 'வேறு யாராவது என் கண்ணைப் போக்கியிருந்தால் என் வேதனை எப்படியிருக்கும்? ஆகையால் நீங்கள் மறுவிவாகம் செய்துகொள்ளவேண்டும்' என்கிருள். 'ஆ, என்ன சொன்னுய்! உன்னையன்றி வேருரு பெண்ணை இனி என் கண் காணுது' என்று சபதமிட்டு அவள் முகத்தை நிமிர்த்தி வகுடிடும் இடத்தில் முத்தமிடுகிருள். 'என் ஆந்தர திருஷ்டி' திறந்து கொண்டது என்பாள் அவள். அவள் முன்னையும்விட அவள் கணவனை தெய்வமாக நினைத்து வருகிருள். பிற்பாடு மனிதன்தானே கணவனும்; வரவர மனம் சோர்ந்து, வேறு ஒருத்தியை ஆசைப் பட்டுக் கல்யாணமும் செய்து கொள்ள முனைகிருன். இதை அறிந்த அவள் தனது தெய்வத்துக்கு இழுக்கு வரக்கூடாதென் பதால் அவனை நேரில் கேட்கிருள். அவன் திண்டாடிவிட்டு கல்யாணம் செய்து கொள்ள ஓடிவிடுகிருன். அவ்வளவே! அவள் தெய்வத்திடம் முறையிடுகிருள். எப்படியும் அவன் செய்த சபதம் வீணுகாது அவனைக் காப்பாற்றும்படி கடவுளைப் பிரார்த்திக்கிருள்.

புயல்காற்று ஒன்று கிளம்பி அடித்து அவன் சென்ற ஓடம் கவிழ்ந்து கணவன் கல்யாணம் தடைபடுகிறது. முகூர்த்தம் தவறக்கூடாதென்று வேறு மணமகனைக் கொண்டு அவளுக்கு தாலி கட்டச் செய்கிருர்கள் பந்துக்கள். கணவன் மனைவியிடம் திரும்புகிருன். வந்து அவளிடம் 'குமு, நீ என்னை உன் தெய்வ மாகவே இனிக் கூறக்கூடாது' என்று ஏங்கி வருந்துகிருன்.

கதை இன்றுள்ளவர்களுக்கு திருப்தி அளிக்குமோ என்னவோ, பாரதப் பண்பாடு என்பதை விளக்கும் கதை அது. குமுதினிக்கு மட்டுமா 'திருஷ்டிதானம்' உண்டாகிறது. மக்கள் எல்லோருக்குமே கண் திறக்கின்றதல்லவா! பெண்மையின்

முன்னேற்றத்தில் தீவிர வேகம் பூண்டவர் டாகுர். இருப்பினும், பாரதப்பண்பாட்டின் தனிச்சிறப்பை நினைந்து புதியதை எதுவாயினும் ஏற்பதைவிட்டுப் பழமையில் உயர்ந்தவைகளை பாரத நாட்டுப் பெண் மறக்க இஷ்டப்படமாட்டாள், என்பதையும் காட்டுகிறார்.

கடைசியில் ஒரு வார்த்தை. புதிய எழுத்தாளர்கள் எங்கும் நிறைய உண்டாகிவிட்டார்கள். தமிழ் நாட்டிலும் பலர் புது வேகங்களில் மனங்கவர விட்டு, நம் பண்பாட்டிற்குச் சிறிதும் ஒத்துவராத பல கருத்துக்களை வாரி வழங்குகிறார்கள். வாசிக்கும் இளைஞர்கள் ஆண், பெண் அடங்க, புதியதென்பதால் இவைகளில் உணர்ச்சியைக் கொட்டுகிறார்கள். புதுப்புது கற்பனைகளில் தவறில்லை. ஆயினும் சமூகம் மாறவேண்டுமென்பதற்காக எழுத்தில் காணக்கூடாத ஆபாசங்களைக் குவிப்பது யாருக்கும் பயனளிக்காது. புதுபுது கற்பனைகளில் என்றுமே உத்ஸாகம் காட்டியவர்தாமே டாகுரும்! அவர் மறக்காமல் நமக்களிக்கும் உபதேசத்தை நினைத்தோமானால் எழுத்தாளர்கள் எங்கும், இங்கும் நிச்சயம் முன்னேற்றம் அடைந்தவர்களாவார்கள் என்பதில் சந்தேகமில்லை. தமது 'கலைஞன் தருமம்' என்ற கட்டுரையில் சொல்லுவார் "இலக்கியத்தில் புதுமோசர் மோகங்கள் சீக்கிரமே சலிப்படைந்துவிடும்; ஆழத்திலிருந்து அவை வருபவையல்ல என்ற காரணமேதான் அவைகளின் சுருக்கமான அழிவுக்கு. பிரவாகம் வருகையில் கொப்புளமும் நுரையும் மேலே மிதக்கத்தான் செய்யும்; கணப்பொழுதே பகட்டுடன் தோன்றுபவையே, இவ்வித இலக்கியங்களும். அவசரத்திறல் உள்ளே இருக்கவேண்டிய வளர்ச்சியையும் இழந்து உதிர்காலத்தின் சருகுகளைப்போல் மாறுதல்களில் தத்தளித்துவிட்டு, வெளிவேஷங்களில் பிரமை ஏற்பட்டதால், நிலைத்தவைகளை வழுவவிட்டு அவக்கேட்டால் வெட்கித் தலை குனிந்துவிடும். இன்னும் கவனித்தால், இப்புது இலக்கியம் செய்வதெல்லாம் அங்கங்களிலும் முகபாவங்களிலும் காணும் சேஷ்டை போன்றவை. இவை பாலைவனத்தில் முளைக்கும் முட்களுடன்கூடிய சப்பாத்தியைப்போல் துளியும் தன் விகாரத்தில் கூச்சமின்றி, முழு வறுமையை விளம்பரப் படுத்துபவை. இன்று ஏற்பட்ட புதிய எழுத்துக்களில் இவைகளின் எதிரொலிகளையே கேட்கின்றோம். திடுக்கிடும் சம்பவங்

களையும், முன்னுக்குப்பின் ஒவ்வாத நிகழ்ச்சிகளையுமே இவை தள்ள இயலாது தவிக்கின்றன. ஒருகால் எங்காவது பண்புடன் தோன்றுவதாயினும், அமைதியையும் சுய நம்பிக்கையையும் இழந்தேதான் எல்லாம் விளைகின்றன. வாசகர்களுக்கு மதிப்பு ஏற்படாவிடில் என் செய்வது என்ற பயமேகூட காரணம் இக்கதிக்கு. இப்படியுமா பண்பாடு துளியும் கண்ணில் படாது மறைந்து கேவலம் கெட்டிக்காரத் தனத்துக்காக தன் சுய யோக்கியதையை இழக்கவேண்டும்? அறிவாளி தன்னை கோமாளி வேஷத்தில் காட்டிக்கொள்வதும், படித்தவன் பாமரர்களை விநோதப்படுத்துவதுபோலும் ஆகிவிடும்"*

எழுத்துக்கலை கண்யமான பீடத்தில் அமரவேண்டும் என்பது டாகுருடைய முடிவான செய்தி. தமிழில் இன்று மலிவெய்திருக்கும் கதைகளும் நாவல்களும் இவ்வுபதேசத்தை செவிசாய்த்திருந்தால் அவைகளில் தெரியும் சிந்தனையற்ற போக்கு அன்றே திருந்தியிருக்கும்.

டாகுருக்கும் தமிழுக்கும் என்ன பிணைப்பு என்போருக்கு, கவிக்கும் இலக்கியத்துக்கும், கதைக்கும் வாழ்க்கைக்கும் என்ன உறவு உண்டோ அதுவேதான் என்று காட்டி, இதைவிட உயர்ந்த உபதேசம் வேறெவராலும் அநுபவத்தின் விளைவாக கூற முடியாது என்று முடிவும் கூறலாம். வேறெந்த தற்காப்பும் இன்று தமிழ் இலக்கிய உலகில் உழைப்பவர்களுக்கு அவசியமும் மில்லை.

---

* கலைஞன் தருமம் (Religion of the Artist) டாகுர்